இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 06 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 31 – சனிக்கிழமை 16 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 06 : Thiruvalluvar Year - 2056 - Aadi 31 - Saturday 16 August 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.



சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் தேசியக் கொடியேற்று விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, முப்படைகளின் உயர் அதிகாரிகள், தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சுதந்திர தினம்: கோட்டை கொத்தளத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்!

## விருதுகளை வழங்கி சுதந்திர தின உரை நிகழ்த்தினார்!

**சென்னை, ஆக. 16–**

**நாட்டின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) காலை 9 மணிக்கு தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். இதைத் தொடர்ந்து அப்துல் கலாம் விருது மற்றும் கல்பனா சாவ்லா விருது உள்ளிட்ட விருதுகளையும் முதல்வர் அவர்கள் வழங்கினார்.**

நாட்டின் 79வது சுதந்திர தினம் நேற்று (15.8.2025) கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சுதந்திர தினத்தன்று டெல்லி கோட்டையில் பிரதமர் மோடி கொடியேற்றி உரையாற்றினார். அந்தந்த மாநில முதல்வர்கள் தலைநகரில் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்கள். அதன்படி, தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் நேற்று (15.8.2025) காலை 9 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சென்னை கோட்டையில் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்ததும், விழா மேடையில் தமிழ்நாட்டிற்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களை பெருமைப் படுத்த ‘தகைசால் தமிழர்’ என்ற பெயரிலான விருது மற்றும் விருதுடன் ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அதேபோன்று, அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூக பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்ட விருதுகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழா மேடையிலேயே வழங்கி கவுரவித்தார்.

முன்னதாக, காலை 8.45 மணிக்கு சுதந்திர தின விழா நிகழ்ச்சிக்கு கோட்டை கொத்தளத்திற்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலாளர் வரவேற்றார். முதல்வருக்கு முப்படை அதிகாரிகள் டிஜிபி, சட்டம் – ஒழுங்கு கூடுதல் டிஜிபி, சென்னை போலீஸ் கமிஷனர் ஆகி யோரை தலைமைச் செயலாளர் முருகானந்தம் அறிமுகம் செய்து வைத்தார். இதையடுத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொண்டார். பின்னர் கோட்டை கொத்தளத்தில், தேசியக்கொடியை ஏற்றி வைத்து முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார். இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மக்களுக்கு சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

சுதந்திர தின உரையில் முதல்வர் அவர்கள் திராவிட மாடல் அரசு இதுவரை செய்திட்ட சாதனைகளையும், இனி செய்யப்போகும் திட்டங்களையும் அறிவித்ததுடன் 9 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்.

சுதந்திர தினவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடியேற்றியதை முன்னிட்டு இரவு, பகல் என 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். தமிழ்நாடு முழுவதும் சுதந்திர தின பாதுகாப்பு பணியில் சுமார் ஒரு லட்சம் போலீசார் ஈடுபடுத்தப்பட்டனர்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். மற்றும் வி.ஐ.பி.க்கள், சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர்.

---

### வேற்றுமையே நமது பெரும் வலிமையெனக் கொண்டாடப்படுகிற

## நாட்டினைக் கட்டமைப்பதற்கான மன உறுதியை இந்நாளில் நாம் மேலும் வலுப்படுத்திக் கொள்வோம்!

### சுதந்திர தின திருநாள் விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 16–**

**சுதந்திரத் திருநாள் விழாவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–**

சக குடிமக்கள் அனைவருக்கும் எனது இனிய விடுதலை நாள் வாழ்த்துகள். மக்களாட்சி திருடப்பட முடியாத, ஒவ்வொரு குடிமகனின் வாக்குக்கும் மதிப்பு இருக்கிற, வேற்றுமையே நமது பெரும் வலிமையெனக் கொண்டாடப்படுகிற நாட்டினைக் கட்டமைப்பதற்கான மனவுறுதியை இந்நாளில் நாம் மேலும் வலுப்படுத்திக் கொள்வோம்!

உண்மையான விடுதலை என்பது மதவெறியை நிராகரிப்பது, பாகுபாடுகளுக்கு முடிவு காண்பது, விளிம்பு நிலையில் உள்ளோரைப் பாதுகாப்பது! ஒவ்வொரு மனிதரும் சமத்துவத்தோடும், மாண்போடும், மரியாதையோடும் வாழ முடிகிற வகையில் நமது விடுதலைப் போராட்ட வீரர்கள் காண விரும்பிய கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பதுதான் உண்மையான விடுதலையாக இருக்கும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதுடன், 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.